செயல்படத் தொடங்கும். எல்லா வகை மீன்களும்தான் உற்பத்தி செய்யப்படும். கட்லா ஃபிஷ்களும் உற்பத்தி செய்யப்படும். கெண்டை மீன்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

இராதாபுரம் கால்வாயிலிருந்து நீர் வழங்கல்

* 279 விஞ.—திரு. வீ. கார்த்திசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சானலில் புதிதாக உதயத்தூர் விஜயபதி கிராமங்களில் அடங்கிய குளங்களை சேர்ப்பதற்கென அங்குள்ள விவசாயிகள் அண்மையில் அரசிடம் அனுமதி கேட்டுள்ளனரா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1971–ம் வருடம் செப்டம்பர் மாதம் அனுமதி கேட்டனர்.

திரு. வீ. கார்த்திசன் : தலைவரவர்களே, அதிக நஞ்சை நிலங்கள் உள்ள இராதாபுரம் பகுதியில் உள்ள குளங்களுக்குப் போதிய தண்ணீர் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே சேர்க்கப்பட்ட ஆயக்கட்டிற்குப் போக மீதித் தண்ணீர் இருந்தால் மேற்கொண்டு ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் விடுகிறார்கள். இதில் குறைந்தது ஐந்து பாசன காலத்திற்காவது பரிசோதனை நடத்தியாக வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் விடுவதற்கு தனிப்பட்ட சிறப்பு விதிகள் ஏதேனும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அந்த விவரப்படி இன்னும் அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனிப்பட்ட சிறப்பு விதிகள் விதிக்கப்பட்டதாகத் தகவல் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

* விஞ 280.—திரு. ச. சங்குமுத்துத் தேவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கால்வாய் பாசன விவசாயிகளிடமிருந்து பாசன வசதி கோரி 1973–ம் வருடம், செப்டம்பர் மாதத்தில் மனுக்கள் எவையேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) நீர்த் தேக்கங்களில் போதுமான நீர் இல்லாமையால் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, 1971–72, 1972–73-ஆம் வருஷங்களில் இக் கால்வாய் மூலம் மொத்தம் எத்தனை ஏக்கர்கள் சாகுபடி செய்யப்பட்டன ? அதற்கு எந்த அடிப்படையில் தீர்வை வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தீர்வை எந்த அளவிற்கு வசூலிக்கப்படுகிறது என்பதைப் பற்றித் தகவல் இல்லை. இது, தண்ணீர் விடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்களா என்ற கேள்வி. அதற்கு மட்டும் தகவல் இருக்கிறது. வேறு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

வேடந்தாங்கல் ஏரியை மேம்படுத்தல்.

*வினா 281 : திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் வட்டம், வேடந்தாங்கலில் உள்ள மரங்கள் பட்டுப் போவதைத் தடுக்கும் வகையில் அங்குள்ள ஏரியை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். வேடந்தாங்கல் ஏரியில் உள்ள மரங்கள் பட்டுப்போகாமல் இருக்க பல பள்ளங்கள் வெட்டும் திட்டம் ஒன்று ரூ. 29,500-க்கு தல அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது.

Boeing Air-Service to Madurai.

*282 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the State Government have been consulted by the Union Government on the opening of Boeing Air Service to Madurai ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the steps taken to get this introduced at an early date ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ), (இ), & (உ) இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தார் மேற்கொண்டு ஒரு போயிங் விமானத்தை வாங்கி 1974-ம் ஆண்டு கடைசியிலோ அல்லது 1975-ம் ஆண்டின் ஆரம்பத்திலோ ஒரு போயிங் 737 விமானத்தை மதுரைக்கு விட உத்தேசித்திருப்பதாக இந்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது.